# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **TAMBARAM** Weekly News Paper www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:13 Issue - 30 09 Nov 2025 - 15 Nov 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902


## தங்கம் விலை உயர்வு

22 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ரூ.11,300 க்கும், ஒரு சவரன் ரூ.240 உயர்ந்து ரூ.90,400க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல, 18 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ரூ.9,425க்கும், சவரனுக்கு ரூ.200 உயர்ந்து ரூ.75,400க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## தொடரை வென்றது இந்தியா!

இந்தியா ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையே யான 5வது மற்றும் கடைசி டி20 போட்டி மழை காரணமாக கைவிடப் பட்டது; 2 போட்டிகள் கைவிடப்பட்ட நிலையில், 5 போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி 21 என்ற கணக்கில் வென்றது.


**3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE@ CHROMPET**

Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School

**3 BHK**
As per Vasthu, CCP, Loan Arranged

MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004



**FLATS FOR SALE @ CHROMPET THIRUMALAI NAGAR**

NISHAN APARTMENT
5th STREET NR. ZION SCHOOL
2 BHK 960 Sqft
3 BHK 1200 Sqft



LIFT/CCP/CCTV/ VIDEO DOOR PHONE AS PER VAASTHU / 24 HRS WATER
NISHAN CONSTRUCTION 98409 84126

**PREMIUM 2 BHK FLATS @ CHROMPET- RADHA NAGAR READY TO OCCUPY**



2 BHK-992-Sqft
LIFT FACILITY / CCP / AS PER VAASTHU
VRM BUILDERS
98400 34209 / 98408 53756

**FLATS FOR SALE @ Chrompet**
12th Cross Street, New Colony
Five minutes walk from Railway station and Bus stand
2 BHK - 785 Sqft READY TO OCCUPY
ONLY ONE FLAT AVAILABLE
Rs 57 lakhs
✓ Bike Parking ✓ Lift ✓ Water Sump
98403 77799

**FLATS FOR SALE @ CHROMPET**
NR.R.P. ROAD VIVEKANANDHA NSN SCHOOLS



AVAILABLE 2BHK 901-921 Sqft
AMENITIES
With Lift | As Per Vaasthu | CCP | CCTV | Videodoor Phone | Ev Charger Point | AUTOMATIC WATER TANK LEVELLER | Red Bricks Construction
INDIVIDUAL WATER TANK
ANUJ HOMES 81481 11101,94446 54776

**Prime Location Plots For Sale**
Scan Here for Location



- Near Kilambakkam Bus Termius
- 10 minutes to Urappakkam Rly. Stn.
- Vandaloor Zoo

For Enquiery
Contact No. : 98400 34209

Near Kilambakkam Bus Stop
Site @
Shri Sathya Sai Nagar Phase-2
Ayyancheri, Chennai.



VRM Sathya Planners
No. 25, Panchayat Colony,
Radha Nagar, Chromepet,
Chennai - 600 044

**PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET**

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR
Nr. HASTHINAPURAM BUS STAND
READY TO MOVE



24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*



3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification: With Lift, As Per Vaasthu, CCP, CCTV, Videodoor Phone, Ev Charger Point, AUTOMATIC WATER TANK LEVELLER, Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD, HDFC BANK, SBI

# ராகு தோஷத் தடைகள்: பரிகாரத் தலங்களின் அரிய ரகசியங்கள்!

ஒருவர் வாழ்க்கையில் ராகு கிரக தோஷம் ஏற்பட்டால் அவர் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடும். இதனால் திருமணத் தடை, ஆரோக்கிய சீர்கேடு, குடும்பம் மற்றும் வியாபாரம் போன்றவற்றில் பிரச்னைகள் போன்றவற்றை ஏற்படுத்தும். மேலும் இந்த தோஷத்தால் தூக்கமின்மை, கெட்ட கனவுகள், உடல் அசதி, சோம்பல், பணக்கஷ்டம் போன்றவையும் ஏற்படலாம். சில நேரம் குடும்பத்தில் அனாவசிய செலவுகள், வழக்கு பிரச்னைகள் போன் றவையும் ஏற்படும். ராகு தோஷத்தைப் போக்கும் சில முக்கியமான பரிகாரத் திருத் தலங்கள் .

1. காளஹஸ்தி: இங்கு காளத்தி நாதரின் உருவில் ராகுவும் கேதுவும் இருப்பதாக ஐதீகம். இதனால் கிரகண காலங்களில் இக்கோயிலை மூடுவதில்லை. இங்கு கோயில் வழி சுற்று அப்பிரதட்சிணமாக அமைந்திருக்கின்றது.

2. இராமேஸ்வரம்: இங்குள்ள தேவிப்பட்டினம் சென்று ஸ்ரீஇராமர் வழிபட்ட நவகிரகங்களை வழிபட்ட பிறகு இராமேஸ்வரம் சென்றால் ராகு தோஷம் மட்டுமின்றி, அனைத்து தோஷங்களும் நீங்கும்.

3. திருப்பாம்புரம்: ராகுவால் அதிக மனச்சோர்வு ஏற்பட்டவர்கள் இத்தலம் சென்று வழிபட ராகு அருள் கிடைக்கும்.

4. நாகர்கோவில்: இங்குள்ள நாகநாதர் ஆயில்ய நட்சத்திரத்துக்கு அதிபதியாக இருப்பதால் ஆயில்ய நட்சத்திரத்தன்று விசேஷ பூஜை நடைபெறும்.

5. திருச்செங்கோடு: அர்த்தநாரி உருவத்தில் அருளும் இத்தல சிவன், பார்வதியை வழிபட ராகு தோஷம் விலகும்.

6. பேரையூர்: புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நாகநாதர் கோயிலில் வழிபட ராகு தோஷம் நீங்கும். கோயில் மதில் முதல் உட்புறங்களிலும் ஆயிரக்கணக்கான சர்ப்ப விக்ரகங்கள் உள்ளன.

7.அஷ்டதசபுஜ மகாலெக்ஷ்மி துர்காதேவி: புதுக்கோட்டையில் உள்ள புவனேஸ்வரி அவதூத வித்யா பீடத்தில் எழுந்தருளியுள்ள துர்கையை வழிபட, ராகுவின் அருள் கிடைக்கும். ஜாதகத்தில் ராகு, சுக்கிரன் இணைந்தவர்கள் இந்த துர்கையை வழிபடுவது நல்லது.

8. ஸ்ரீ அரியநாச்சியம்மன்: விருதுநகர் மாவட்டம், நல்லுக்குறிச்சி கிராமத்தில் சிவனும் சக்தியும் அமர்ந்த நிலையில் உள்ள அரிய நாச்சியம்மன் மட்டும் தான் ராகு செவ்வாய் இணைந்தவர்கள். இக்கோயிலை வழிபட, நல்ல பலன் கிடைக்கும்.



9. காளி வழிபாடு: சிதம்பரம் தில்லைக்காளி, உறையூர் வெக்காளி மற்றும் மடப்புரம் பத்ரகாளி போன்ற காளி தேவியரை வழிபட ராகு தோஷம் நீங்கும்.

10. பஞ்சமி திதி: நாகங்களுக்கு மிகவும் புனிதமானது பஞ்சமி திதி. இந்த திதியில் நாகங் களை வணங்க ராகு தோஷம் நீங்கும்.

11. ஸ்ரீரங்கம்: ஸ்ரீரங்கம் அரங்கநாதருக்கு எதிரில் காட்சி தரும் கருடன் உடல் முழுவதும் நாகாபரணங்களோடு காட்சி தருவார். இவரையும் சக்கரத்தாழ்வார் சன்னிதி செல்லும் வழியில் ஒரு கையில் அம்ருத கலசமும் ஒரு கையில் நாகத்தையும் பிடித்துக் கொண்டு உடல் முழுவதும் நாகங்களை ஆபரணமாக அணிந்த கருடாழ்வாரையும் வணங்க நாக தோஷம் நீங்கும்.

12. திருவொற்றியூர்: சென்னை திருவொற்றியூரில் அருளும் வடிவுடையம்மன் உட னுறை படம் பக்க நாத ரை வணங்க நாக தோஷம் தீரும்.

13. கும்பகோணம்: காவிரி சென்று காவிரியில் நீராடி வன துர்கையை வழிபட நாக தோஷம் நீங்கும்.

14. காஞ்சீபுரம்: இங்குள்ள சித்ரகுப்தன் ஆலயம் சென்று கொள்ளு, உளுந்து மற்றும் ப்ரௌன் நிறதுணி தானம் செய்து பசுவுக்கு உண்ணக் கொடுக்க நாகதோஷம் நீங்கும்.

15. சிவகங்கை: இங்குள்ள காளையார் கோவில் சென்று கௌண்டின்ய மகரிஷி மற்றும் மகமாயி அம்மன் கானக் காளையீஸ்வரரை வழிபட நாகதோஷம் நீங்கும்.

16.ஸ்ரீவாஞ்சியம்: இங்குள்ள நாக தீர்த்தத்தில் நீராடி நாக நாதரையும் நாகராஜனையும் வழிபட நாக தோஷங்கள் விலகும்.

17. முண்டகக்கன்னி அம்மன்: சென்னை, மைலாப்பூரில் உள்ள முண்டகக்கன்னி அம்மனை வழிபடநாக தோஷம் நீங்கும்.

18. திருவாலங்காடு: கார்கோடகன் மற்றும் வண்டார் குழலம்மை உடனுறை ஊர்த்துவதாண்டவரை வழிபட நாக தோஷம் விலகும்.

# ஸ்ரீ சுதர்சனர் வழிபாடு பற்றிய அரிய 10 விஷயங்கள்!

ஸ்ரீ சக்கரத்தாழ்வாரை தரிசித்தால், சகல தோ ஷங்களும் விலகும். அவரின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்று நிம்மதியும், சந்தோஷமும் பொங்க வாழலாம் என்பது ஐதீகம்.

1. ஸ்ரீ சுதர்சனரை வழிபட சித்திரை நட்சத்திர தினங்கள் சிறப்பானவை. சித்திரை அவருக்குரிய நட்சத்திரம்.

2. சுவாமி தேசிகனின் சுதர்சனாஷ்டகமும், ஹோடசாயுத ஸ்தோத்திரமும் சொல்லி வந்தால் எளிதில் ஸ்ரீ சுதர்சனரின் அருளைப் பெறலாம்.

3. சக்கரத்தானை, ‘திருவாழியாழ்வான்’ என்று போற்றுகின்றனர் ஆழ்வார்கள்.

4. சுவாமி தேசிகன் இவரை ‘சக்ர ரூபஸ்ய சக்ரிண’ என்று போற்றுகிறார். அதாவது, திருமாலுக்கு இணையானவர் என்று இதற்குப் பொருள்.



5. கும்பகோணம் சக்ர படித்துறையில் உள்ள சக்கர தீர்த்தத்தில்தான் பிரம்மா அவப்ருத நீராடல் செய்து யாகம் செய்தார். உடனே பாதாளத்திலிருந்து சக்கரம் வெளிக்கிளம்பி மேலே வந்தது. அந்த சக்கரத்தின் நடுவில் பிரம்மனுக்கு அன்று காட்சி தந்த ஸ்ரீமந் நாராயணன் தான் இன்று நமக்கு ஸ்ரீ சக்ரபாணியாகக் காட்சி தருகிறார்.

6. சாளக்ராமங்களில் சுதர்சன சாளக்ராமம் மிகச் சிறந்தது. ஒரு சக்கரம் மட்டுமே உள்ள மிகப்பெரிய சாளக்ராமம் சுதர்சனமாகும். திருமாலின் சக்ராயுதத்தின் பூர்ண சக்தி இதற்கு உண்டு.

7.ஸ்ரீ சக்கரத்தாழ்வாரையும், அவர் பின்புறமுள்ள ஸ்ரீ நரசிம்மரையும் வணங்கி சுற்றி பிரதட்சணம் செய்தால், நான்கு வேதங்களையும், பஞ்ச பூதங்களையும் அஷ்ட லட்சுமிகளையும், எட்டு திசைகளையும் வணங்கிய பலன் கிடைக்கும். 16 வகையான பேருருளும் கிடைக்கும் என்பது முன்னோர்களின் வாக்கு.

8. நரசிம்ம அவதாரத்தில் அரக்கனின் வரத்தையொட்டி எந்த ஆயுதமும் இல்லாமல் ஹிரண்யகசிபுவை நரசிம்மர் அழித்தபோது, அவரது நகங்களாக விளங்கியவர் சுதர்சனரே.

9. வாமன அவதாரத்தில், சுக்ராச்சாரியாரின் கட்டளையை மீறி மகாபலி மன்னன் வாமனனுக்கு தானம் கொடுக்க தாரை வார்த்த போது, சுக்ராச்சாரியார் வண்டாக வந்து கமண்டல நீர்ப்பாதையை அடைத்தார். அப்போது திருமால் பவித்திரத்தால் கிளற, சுக்ராச்சாரி யார் தனது கண்ணை இழந்தார். அங்கு பவித்திரமாக வந்தவர் சுதர்சனரே.

10. சக்கரத்தாழ்வார் பல பழைமையான திருக்கோயில்களில் தனிச்சன்னிதி கொண்டு காட்சியளிப்பதைக் காணலாம். (குறிப்பாக ஸ்ரீரங்கம்,காஞ்சிவரதர் கோயில், திருமாலிருஞ்சோலை கள்ளழகர் கோயில், திருமோகூர், ஸ்ரீவில்லிபுத்தூர்.) தற்போது ஸ்ரீ சுதர்சனரின் மகிமையைப் புரிந்து கொண்டு பல திருத்தலங்களில் இவருக்குத் தனிச்சன்னிதி அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

# நவம்பர் மாதம் குபேர சம்பத்து வழிபாடு



செல்வ செழிப்பிற்கு அதிபதியாக திகழக் கூடியவள் மகாலட்சுமி தாயார் என்றாலும் அந்த செல்வ செழிப்பிற்குரிய கணக்கை சரிவர பராமரித்து யாருக்கு செல்வத்தை தர வேண்டும் யாருக்கு செல்வத்தை தரக்கூடாது என்பதை தீர்மானிக் கக்கூடிய ஒருவராக திகழக்கூடியவர் தான் குபேர பகவான். குபேர பகவானுக்கு இந்த அந்தஸ்து கிடைப்பதற்கு முக்கியமான காரணமாக திகழ்ந்தவர் சிவபெருமான். அப்படிப்பட்ட குபேரபகவானுக்குரிய சிறப்பு மிகுந்த மாதமான இந்த நவம்பர் மாதத்தில் குபேரரின் அருளை பெறுவதற்கு செய்ய வேண்டிய வழிப்பாட்டு முறையை பற்றி நாம் தெரிந்து கொள்போகிறோம். மகாலட்சுமி தாயாரை வழிபாடு செய்வதோடு குபேர பகவானையும் நாம் வழிபாடு செய்தால் தான் மகாலட்சுமி தாயார் கொடுக்க வேண்டும் என்று நினைத்த செல்வத்தை நம்மால் பெற முடியும். அந்த அளவிற்கு சக்தி வாய்ந்தவராக தான் குபேரபகவான் திகழ்கிறார். நவம்பர் மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் நாம் குபேர பகவானை வழிபாடு செய்ய வேண்டும். அப்படி வழிபாடு செய்வதற்கு ஏதாவது ஒரு இனிப்பு பொருள் இருந்தால் போதும். ஒரு லட்டு, கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை, வெள்ளை சர்க்கரை என்று எது இருந்தாலும் போதும். இதனுடன் ஒரே ஒரு ரூபாய் நாணயவும் இருக்க வேண்டும். இந்த வழிபாட்டை பிரம்ம முகூர்த்த நேரத்தில் காலையில் எழுந்ததும் முகம் கை கால்களை கழுவி விட்டு அமைதியாக ஒரு இடத்தில் வடக்கு திசை பார்த்தவாறு அமர்ந்து கொண்டு, வலது கையில் இனிப்பையும் அதற்கு மேல் ஒரு ரூபாய் நாணயத்தையும் வைத்து இடது கையால் மூடிக்கொள்ளுங்கள். உங்களுடைய நெஞ்சுக்குழியில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு குபேர பகவானின் மந்திரமான “ஓம் கும் குபேராய நமஹ” என்னும் மந்திரத்தை 27 முறை கூற வேண்டும். பிறகு குபேரரின் துதியை ஒரு முறை கூறிவிட்டு குபேர பகவானிடம் செல்வ செழிப்பு உயர வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து கையில் இருக்கக்கூடிய ஒரு ரூபாய் நாணயத்தை அன்றைய தினம் நாம் செலவு செய்யக் கூடிய பணத்துடன் வைத்து விட்டு இனிப்பை வடக்கு திசை பார்த்தவாறு வீட்டிற்கு வெளியே தூவி விட வேண்டும். அந்த ஒரு ரூபாய் நாணயத்தை அன்றைய தினமே அருகில் இருக்கக்கூடிய பெருமாள் ஆலயத்தின் உண்டியலில் போட்டு விட வேண்டும். தினமும் ஆலயத்திற்கு செல்ல முடியாதவர்கள்,ஒவ்வொரு நாளும் பூஜை செய்து தனியாக வைத்து நவம்பர் மாதம் முழுவதும் ஒன்று சேர்த்து உண்டியலில் போட்டு விடலாம். இந்த வழிபாட்டை தினமும் செய்ய வேண்டும். தினமும் ஒரு ரூபாய் நாணயத் தையுமை இனிப்பையும் கையில் வைத்துக் கொண்டு குபேரரின் மந்திரத்தையும் துதியையும் சொல்லி உபயோக ப்படுத்துவதன் மூலம் குபேர சம்பத்து உண்டாகும்.

## வாராஹி அம்மன் கனவில் தோன்றுவது மிகவும் அரியதும், அதிர்ஷ்டம்

வாராஹி அம்மன் என்பது அஸ்தலக்ஷ்மிகளில் ஒன்றான வராகி சக்தி. அம்மன் கனவில் தோன்றினால், அது உங்கள் மீது அவளது தெய்வீக அருள் விழுந்திருப்பதை குறிக்கும். இது நீங்கள் செய்த பூஜைகள், தபங்கள், பக்தி ஆகியவை பலனளிக்கத் தொடங்கியுள்ளதைக் காட்டும்.

கனவின் பலன்கள்:

வீட்டில் வளம் பெருகும்: பொருளாதார வளமும், செல்வமும் அதிகரிக்கும். தீய சக்திகள் விலகும்: வாராஹி அம்மன் சக்தி நெகட்டிவ் எனர்ஜிகளை அழிக்கும் சக்தி. அரசு, அதிகாரம், வேலை உயர்வு: வாராஹி அம்மன் “அரசாட்சி தந்தை” என்று போற்றப்படுகிறாள். வேலை, பதவி, மதிப்பு உயரும். மன அமைதி கிடைக்கும்: நீண்ட நாட்களாக இருந்த மன குழப்பம் தீரும். ஆசை நிறைவேறும்: நீங்கள் நினைத்தது விரைவில் நிறைவேறும் எனும் அறிகுறி.

வழிபாடுகள்:

அடுத்த வெள்ளிக்கிழமை அல்லது அமாவாசை நாளில் அம்மனை சிவப்பு புஷ்பம், எள் விளக்கு கொண்டு வழிபடுங்கள். “ஓம் வாராஹி அம்மனே போற்றி” என்று 108 முறை சொல்லுங்கள். விருப்பமிருந்தால் அம்மனுக்கு நெய்வேத்யம் , பாயசம் அல்லது பொங்கல் சமர்ப்பிக்கலாம்.

## தக்காளி, தேங்காய், மாங்காய், சாதம்



மிகவும் வித்தியாசமான ரெசிபி. தக்காளியில் வைட் டமின் ஏ, மற்றும் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. தேங்காயில் புரதம் மற்றும் செலினியம் சத்துக்கள் நிறைய உள்ளது. மாங்காயில் வைட்டமின் சி அதிகம் உள்ளது.

**தேவையான பொருட்கள்:**

பொடியாக நறுக்கிய தக்காளி 1/2 கப், துருவின தேங்காய் 3/4 கப் , துருவின மாங்காய் 1 கப், உதிரியாக வடித்த சாதம் 4 கப், கீறின ப.மிளகாய் 3, மஞ்சள் தூள் 3/4 டீ ஸ்பூன், தனி மிளகாய் தூள் 2 ஸ்பூன், கல் உப்பு ருசிக்கு, உடைத்த முந்திரி 12, தாளிக்க: கடுகு 1 டீ ஸ்பூன், கடலைபருப்பு 3/4 ஸ்பூன், உ.பருப்பு 1/2 ஸ்பூன், சீரகம் 1 டீ ஸ்பூன், கறிவேப்பிலை 1 ஆர்க்கு, பெருங்காயத்தூள் 2 டீ ஸ்பூன், நெய் 2 ஸ்பூன், எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன், அலங்கரிக்க: தக்காளி துண்டுகள், தேங்காய், மாங்காய் துருவல், முந்திரி.

**செய்முறை:**

தக்காளியை சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காய், மாங்காயை துருவிக் கொள்ளவும். கடாயில், நெய், எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு போட்டு வெடித்ததும், க.பருப்பு, உ.பருப்பு, போட்டு கருகாமல் சிவந்ததும், கீறின ப.மிளகாய், சீரகம், கறிவேப்பிலை, போட்டு தாளிக்கவும். தாளித்ததும், முந்திரி, மஞ்சள் தூள், உப்பு போட்டு வதக்கவும். பிறகு தக்காளி, மிளகாய் தூள், சேர்க்கவும். அடுத்து தேங்காயை சேர்க்கவும்.பின் மாங்காயை சேர்க்கவும். அனைத்தையும் நன்கு கிளறவும். உதிரியாக வடித்த சாதம் சேர்த்து ஒன்று சேர சாதத்தை உடையாமல் கிளறி அடுப்பை நிறுத்தி விட்டு, பெருங்காயத்தூள், 1 ஸ்பூன் நெய் சேர்த்து, இறக்கவும். இறக்கினதும், பௌலுக்கு மாற்றவும். இப்போது, வித்தியாசமான, சுவையான, சுலபமான தக்காளிதேங்காய், மாங்காய், சாதம் தயார்.


CLASSIFIEDS

RENTAL

FLAT FOR RENT
@ CHITLAPAKKAM - SIVAGAMI NAGAR
NR. HARIDASSPURAM MAIN ROAD
862 Sqft - OCP - FIRST FLOOR
Veg Only - RENT - 15K Per Month
99520 79657

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

COMMERCIAL SPACE FOR RENT
@ CHITLAPAKKAM-ANNA ST
CHROMPET
COMMERCIAL BUILDING
G.F.2000 Sqft
F.F.2000 Sqft
WITH AMPLE CAR PARKING
BANK OFFICE
MINI WAREHOUSE
CLINIC ETC.
98411 14736

BUILDING CONTRACT

HARIKRUPA CONSTRUCTION
→ CONSTRUCTION
→ INTERIOR
→ RENOVATIONS
→ PAINTING
94440 50507
98848 89904

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

FLAT RESALE

FLAT FOR RESALE
@CHROMPET
NEHRU NAGAR, BANG ON R.P.ROAD
2 BHKD, BUA- 760 Sqft
UDS -652 Sqft
LIFT, OCP , 24/7 Security
NO BROKERS
93608 75050
80159 15629

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS - 412 Sqft 1st FLOOR
@ HASTHINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD ,1st FLOOR
LIFT ,CCP
80722 30451

INDEPENDENT HOUSE

IND. HOUSE FOR SALE
@NEHRU NAGAR
3 BHK
FLAT FOR RESALE
@HASTHINAPURAM
3 BHK , 1900 Sqft
FIRST FLOOR, LIFT, CCP
80722 30451

IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
FLATS FOR SALE
@ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

# குரோம்பேட்டை சிவாலயங்களில் அன்னாபிஷேகம்






ஐப்பசி மாத பௌர்ணமி தினத்தில் வரும் அன்னாபிஷேகத்தை முன்னிட்டு குரோம்பேட்டையில் 1.புருஷோத்தம் நகர் ஸ்ரீ விஜய கணபதி லட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் அர்த்தநாரீஸ்வரர் அலங்காரம், 2. பத்மநாப நகர் கருமாரியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுருட்டப்பள்ளி சிவன் அலங்காரத்தில் , 3. காந்திஜி நகர் துர்க்கை அம்மன் ஆலயத்தை அமைந்துள்ள ஸ்ரீ அமிர்தகடேஸ்வரருக்கு அன்னாபிஷேக அலங்காரம், 4. ராதா நகர் ஸ்ரீ ராமசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் அன்னாபிஷேக அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி கொடுத்தனர். இந்நிகழ்வுகளில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## செல்போன் கட்டணம் உயர்கிறது

தனியார் தொலைதொடர்பு சேவை நிறுவனங்கள் ரீசார்ஜ் கட்டணங்களை உயர்த்த இருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது. வரும் டிசம்பர் மாதத்தில் இருந்தே இந்த ரீசார்ஜ் கட்டணங்கள் உயர்வு என்பது அமலுக்கு வரும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜியோ, ஏர்டெல் நிறுவனங்கள் தற்போது நாடு முழுவதும் 5ஜி சேவைகளை வழங்கி வருகின்றன . இதற்கான பராமரிப்பு செலவுகள் அதிகரித்து இருப்பதால் தங்களுடைய வருமானத்தை ஈடுகட்ட ரீசார்ஜ் கட்டணங்களை உயர்த்த முடிவு செய்து இருக்கிறார்கள்.

## தெரு நாய்களை அகற்ற உச்ச நீதிமன்றம் புதிய உத்தரவு

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், "பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களிலும் தெருநாய்கள் நுழைவதைத் தடுக்க முறையாக வேலி அமைக்க வேண்டும்.

விலங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கான விலங்கு பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2023ன்படி, இத்தகைய வளாகங்களில் இருக்கும் தெருநாய்களைப் பிடித்து அவற்றுக்கு தடுப்பூசி போட வேண்டும். மேலும், அவற்றுக்கு கருத்தடை செய்ய வேண்டும். அதன் பிறகு அவற்றை நியமிக்கப்பட்ட தங்குமிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். உள்ளூர் அதிகாரிகள் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். இந்த இடங்களில் இருந்து பிடிக்கப்படும் தெருநாய்களை அதே இடத்தில் விடக்கூடாது என்று கூறி உள்ளது.

## ஜி20 மாநாட்டை புறக்கணித்த டிரம்ப்

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டை புறக்கணிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவிப்பு

ஆப்பிரிக்காவில் மனித உரிமை மீறல்கள் தொடரும் வரை, எந்த அமெரிக்க அதிகாரிகளும் பங்கேற்க மாட்டார்கள் என கூறியுள்ளார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தின்போது நீங்கள் வீட்டில் இல்லாவிட்டால், ஓட்டுரிமை விட்டு போய் விடுமோ? என்ற பயம் வேண்டாம்.

erolls.tn.gov.in/blo என்ற இணையதளத்தில் இருந்து உங்கள் ஏரியாவில், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளும் அலுவலரின் செல்போன் எண்ணை எடுத்துக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்கள் வீட்டுக்கு அலுவலர் எப்போது வருவார் என முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்

மூன்று வேளையும் வீட்டு சாப்பாடு
• காலை / இரவு - டிபன்
• மதியம் - சாப்பாடு
பிராமின்ஸ் சமையல் (சைவம்)
அஜினோமோட்டோ, Food Color சேர்க்கப்படாமல் சிறந்த முறையில் தயார் செய்துதரப்படும். (Door Delivery)
Sri Vinayaga Catering Services
63696 54457 / 98846 99008

On-Line Also. Age No Bar
SPOKEN HINDI - ENGLISH
HINDI - ENGLISH - SANSKRIT - TAMIL
HINDI PRACHAR SABHA PARICHAYA TO PRAVEEN
Search @ Google & Just dial for MPR Hindi Study Centre
87545 19519 98418 19519

## தங்க வெள்ளி விலை உயர்வால் பட்டுச்சேலைகள் விலையும் உயர்வு

தங்கம் வெள்ளியின் விலை கடந்த சில மாதங்களாக கடுமையாக உயர்ந்தது இந்த நிலையில் காஞ்சிபுரத்தில் பட்டு சேலைக்கு பயன்படுத்தப்படும் தங்கம் முலாம் பூசப்பட்ட வெள்ளி ஜரிகைகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது வெள்ளி விலை உயர்வு காரணமாக இந்த விலை அதிகரிப்பு நடந்துள்ளது இதனால் ரூபாய் 30 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட பட்டுச் சேலை தற்போது ஒரு லட்சத்திற்கு விற்கப்படுகிறது விலை அதிகரித்ததால் பட்டு சேலை விற்பனை ஆகாமல் காஞ்சிபுரத்தில் தேக்கமடைந்துள்ளது

BUILDING CONSTRUCTION
RENOVATION
INTERIOR
INCLUDING OHT& SEPTIC TANK
KR HOMES
80724 99969

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

## கோவை கேரள எல்லையில் 10க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகள் நிறுத்திவைப்பு

கேரளாவில் சாலை வரி செலுத்தாமல் இயக்கப் பட்டதாகக்கூறி தமிழ்நாட்டில் இருந்து செல்லும் 30 ஆம்னி பேருந்துகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது

30 ஆம்னி பேருந்துகளுக்கு ரூ.70 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டதால் கோவையில் பேருந்துகள் நிறுத்தப்பட்டன. ஒரு நாளைக்கு மட்டும் செல்ல அனுமதி பெற்று விட்டு தொடர்ந்து இயக்குவதாக ஆம்னி பஸ்கள் மீது கேரளா அரசு குற்றம் சாட்டியுள்ளது

ஆனால் அரசு நடவடிக்கை எடுக்கப்படாது என உறுதியளித்தால் மட்டுமே ஆம்னி பேருந்துகள் இயக்கப்படும் என உரிமையாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

## குளிர்கால கூட்டத் தொடர்

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடர் டிசம்பர் 1ம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

டிசம்பர் 1இல் தொடங்கி 19 வரை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நடைபெறும்; குளிர்கால கூட்டத் தொடரை ஆக்கப்பூர்வமாக நடத்த ஒத்துழைப்பு தர வேண்டும் என மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறினார்.

## பெண்கள் 40 வயதிலும் 20 போல் இருக்க சில குறிப்புகள்

முதுமை அல்லது வயதாவதை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் நமது உடலை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்து கொள்ள கண்டிப்பாக முடியும். பொதுவாகவே திருமணத்துக்கு பிறகு பெண்கள் தங்களை கவனித்து கொள்வதில்லை என்ற குற்றாச்சட்டு இருக் கிறது. குடும்பம் வீடு, குழந்தை என அவர்கள் தங்களை ஒரு கூட்டுக்குள் அடைத்து கொண்டு தங்களையே மறந்து குடும்பத்துக்காக உழைத்து கொண்டிருப்பார்கள். இன்றைய நிலைமை கொஞ்சம் மாறியுள்ளது. பல பெண்கள் தங்களது உடல் நலன்மீது அக்கறை செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். சிலருக்கு ஆசை இருந்தாலும் எப்படி பின்பற்றுவது என்ற குழப்பம் இருக்கிறது. அவர்களுக்கான சில டிப்ஸ். மனநிலை முக்கியம்: ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மகிழ்ச்சியான அமைதியான மனநிலை அவசியம். இந்த உலகில் பிரச்சனைகள் இல்லாத மனிதர்களே கிடையாது. நாம் அனைவரும் எத்தனையோ பிரச்சனைகளை கடந்தே வந்திருப்போம். அதனால் இனி மேல் புதிதாக ஏதும் பிரச்சனை வந்தால் அட நாம் பார்க்காததா? என்று நினைத்து கொண்டு திடமா அவற்றை கடக்க முயற்சி செய்யுங்கள். இது உங்கள் மனதுக்கும், முகத்துக்கும் புதுப்பொலிவை தரும். அடிக்கடி நீங்கள் ஆரோக்கியமானவராகவும், மகிழ்ச்சியானவராகவும் இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். உடல் மேல் கவனம்: நாம் வாழ்வதே இந்த உடலின் மூலம் தான் ஆகவே உடல் மீது நமக்கு மிகுந்த அக்கறை வேண்டும். எனவே முதலில் கவனிக்க வேண்டியது தூக்கம், வாரத்துக்கு 4 முதல் 6 தடவையாவது சின்ன சின்ன உடற்பயிற்சிகளை செய்வது அவசியம். நிம்மதியான தூக்கம் உங்கள் உடலின் செல்களை புத்துணர்வு அடைய செய்யும். செய்வது தேவையற்ற கொழுப்பை கரைக்க உதவும்.




இவை இரண்டும் நீங்கள் எப்போதும் நல்ல உடல் நிலையை தக்க வைக்க உதவும்.பொழுது போக்கு: டிவி பார்ப்பதே பெரும்பாலானோரின் பொழுது போக்காக இருக்கிறது. இன்னும் சிலருக்கு அதற்கு நேரம் கூட கிடைப்பதில்லை. தையல், எம்ப்ராய்டரி அல்லது உங்களுக்கு பிடித்த வேறு ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுத்து கொள்ளவும். ஒரு நாளில் குறைந்தது 5 நிமிடங்களாவது உங்களுக்கு பிடித்த பொழுதுபோக்கை செய்வதென்று முடிவு செய்து தொடங்குங்கள். அப்புறம் பாருங்கள் உங்கள் மனநிலையின் மாற்றத்தை... ஆரோக்கியமான உணவு: நல்ல உடல் ஆரோக்கியத்துக்கு நல்ல உணவு முக்கியம். உங்கள் உடல் நலத்துக்கு ஏற்றவாறு உணவுகளை தேர்ந்தெடுத்து சாப்பிடுவது அவசியம். வீணாகப்போகிறது என்பதற்காக வயிற்றுக்குள் கொட்டினால் வீணாவது உங்கள் உடல்தான் என்பதை புரிந்து நடந்து கொள்ள வேண்டும். நல்ல நட்பு: எப்போதுமே நம்மை சுற்றியிருப்பவர்களின் செயல்களே நம்மை பாதிக்கும். அதனால் சரியான நபர்களை தேர்ந்தெடுத்து நட்பு கொள்வது மிக முக்கியமானது. நல்ல நண்பர்களே உங்களுக்கு பெரிய ஊக்க சக்திஇவை எல்லாவற்றையும் விட முக்கியமானது நம் மனநிலை. வயதாகிவிட்டது என்ற மனநிலையை தூக்கி எறிந்து விடுங்கள். இவற்றையெல்லாம் தொடர்ந்து பின்பற்றினால் நீங்கள் எப்போதும் 20 தான்.

## இரவு நேரங்களில் இந்த 10 பானங்களைக் குடிப்பதால் நடக்கும் அற்புதம்!

மெடபாலிசத்தால் நாம் உண்ணும் உணவு சக்தியாகிறது. சிலவகை பானங்கள் இரவு உட்கொள்வதால், மெடபாலிசம் தூண்டப்படும்.

**1. இனிப்பில்லாத கெஃபிர்**

இது புளிக்கவைத்த புரதம் மற்றும் ப்ரோபயாடிக் நிறைந்த பானம். குடல் ஆரேக்கியம் மற்றும் செரிமானத்தை இது ஆரோக்கியமாக்கும், நோய் எதிர்ப்பையும் ஊக்குவிக்கும். இதில் ஒரு சிட்டிகை பட்டை பொடி அல்லது பெர்ரி சேர்த்து உட்கொள்ள மெடபாலிசம் மேம்படும்.

**2. சாமோமைல் டீ**

இது சோர்வை போக்கி நல்ல தூக்கத்தை தரக்கூடியது. லெப்டின் மற்றும் க்ரெலின் போன்ற ஹார்மோன்களை சமன்படுத்தும். இதில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தேன் சேர்த்து அருந்துவதால், அழற்சியைக் குறைத்து நோயெதிர்ப்பை அதிகப்படுத்தும்.

**3. வெதுவெதுப்பான எலுமிச்சை நீர்**

உடல் நச்சுக்களை இது நீக்கி வயிறு உப்புசத்தைத் தடுக்கும். வைட்டமின் சி சத்து நிறைந்ததால் நோயெதிர்ப்பு அதிகரிக்கும்.

**4. பட்டை டீ**

இது மெடபாலிசத்தை ஊக்குவிக்கும். ரத்தச் சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கும். சீனி சேர்க்காமல் அருந்துவது நல்லது.

**5. ஆப்பிள் சிடார் வினீகர்**

செரிமானம் சீராகவும், சர்க்கரையைக் கட்டுக் குள்ளும் வைக்கும். ஒரு டேபிள் ஸ்பூன் வினீகரை ஒரு டம்பளர் வெதுவெதுப்பான நீரில் சேர்த்து அருந்தவும். இதோடு பட்டை பொடி தேன் சேர்ப்பது நல்லது.

**6. இஞ்சி டீ**

அழற்சியைக் குறைத்து செரிமானத்தை சீராக்கும் பானம். இதோடு சிறிது புதினா இலை மற்றும் தேன் சேர்க்க மெடபாலிசம் மேம்படும்.

**7. காஃபீன் இல்லாத க்ரீன் டீ**

காடெசின் நிறைந்த இதில் இஞ்சியும், புதினாவும் சேர்த்து இரவில் அருந்தலாம்.

**8. மஞ்சள் பால்**

இதில் சிறிது மிளகும் பொடியும், பட்டைப் பொடியும் சேர்த்து உட்கொள்ள அழற்சியைக் குறைத்து மெடபாலிசத்தை ஊக்குவிக்கும்.

**9. பெப்பர்மிண்ட் டீ**

செரிமானத்திற்கும் ஏற்றது. படுக்கப் போகுமுன் இரவில் உட்கொள்வதால், வயிறு உப்புசம் தடுக்கப்படும்.

**10. வெள்ளரி புதினா பானம்**

குறைந்த கலோரி கொண்ட பானம் வெள்ளரி நீரேற்றத்தை தரும். இதன் நார்சத்து செரிமானத்தை சீராக்கும். புதினா வயிற்றை குளிர் வைக்கும் இந்த பானம் உடல் நச்சுக்களை நீக்கும். மெடபாலிசத்தை மேம்படுத்துகிறது.

## வாசகர்களுக்கு அறிவிப்பு

GST ROAD NEWS Weekly News Paper

குரோம்பேட்டை, தாம்பரம், பல்லாவரம், சேலையூர், என தனித்தனியாக 4 பதிப்புகளாக ஞாயிறு தோறும் இலவச பிரதியை வெளியிட்டு வரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூஸ் லட்சக்கணக்கான வாசகர்களைக் கொண்ட ஒரே உள்ளூர் வார பத்திரிகை. இப்பொழுது வாசகர்களின் வேண்டுகோளை ஏற்று whatsapp சேனலை உருவாக்கி உள்ளது. இதில் அன்றாடம் நடக்கும் உள்ளூர் செய்திகள் மற்றும் மாநில செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள மற்றும் வாரந்தோறும் வெளி வரும் ஜி.எஸ்.டி.ரோடு நியூசின் இ.பேப்பர் மற்றும் சமூக வலைத்தளங்களை உள்ளடக்கிய பேஸ்புக், இன்ஸ்டாகிராம், ஜி.எஸ்.டி. ஆன்லைன் மீடியா youtube சேனல், www.gstroadnews.com என்ற இணையதளத்தின் மூலமாகவும் கண்டு களிக்கலாம் பார்த்து படித்துக் கொள்ள சேனலை பார்த்து பின் தொடருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகம்.

## ஆக்கிரமிப்பாளர்கள் பிடியில் உள்ள ஆர்.பி ரோடு



குரோம்பேட்டை ராஜேந்திர பிரசாத் சாலை கிழக்குப் பகுதியில் ஒரு முக்கியமான சாலை. இங்கு அஸ்தினாபுரத்தில் மிகப் பெரிய பஸ் நிலையம் உள்ளது. இங்கிருந்து நாள் தோறும் 50ற்கும் மேற் பட்ட பேருந்துகளும் பத்துக்கும் மேற்பட்ட ரூட் பஸ்களும் செல்கின்றன. இந்த ராஜேந்திர பிரசாத் சாலையில் பல வங்கிகள், இரண்டு பள்ளிகள்,இரண்டு கோயில்கள், ஒரு தேவாலயம், இரண்டு பெட்ரோல் பங்குகள், நிறைய குறு,சிறு உணவு விடுதிகள், இருசக்கர வாகனம் பழுது பார்க்கும் கடைகள், செயல் படுகின்றன. இந்த சாலையில் போக்குவரத்து நெரிசல் தாங்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. நடைபாதை ஆக்கிரமிப்புகள் இருசக்கர மெக்கானிக் கடைகள் சாலையை முற்றுமாக ஆக்கிரமித்துக் கொள்கின்றன மேலும் ஆர்.பி.ரோட்டில் உள்ள உணவகங்களுக்கு வருபவர்கள் சாலையில் ஆங்காங்கே வாகனத்தை நிறுத்தி விட்டு செல்வதால் இச்சாலையில் மேலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாகின்றன. அதேபோல் அந்த ஹோட்டல்களுக்கு கிச்சன் கிடையாது. இதனால் அவர்கள் சாலையிலே வைத்து வறுப்பது,பொரிப்பது,போன்ற ஆயில் அதிகம் கலந்து மசாலாக்கள் அதிகம் கலந்து அந்தப் புகையை எக்ஸாஸ்ட் ஃபேன் மூலமாக வெளியேற்றுகின்றனர் சாலைக்கு தான் வருகிறது. அத்தனை புகையும் அத்தனை நெடிகளும் சாலையில் செல்லும் பொதுமக்கள் தான் சுவாசித்துக் கொண்டே செல்கின்றனர். இதனால் கண் எரிச்சல் அதிகம் ஏற்படுகிறது. இதனால் பாதிக்கப்படும் பொதுமக்கள் எண்ணிலடங்காதவர்கள் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை அதனால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று மக்கள் விழிப்புணர்வு சங்கத் தலைவர் வி.சந்தானம் கோரிக்கை விடுத்துள்ளார். மேற்சொன்ன காரணங்களால் ராஜேந்திர பிரசாத் சாலை அடிக்கடி சிறிதும் பெரிதும் ஆன விபத்துகள் நடக்கின்றன. சில வருடங்களுக்கு முன்பு கூட பள்ளி மாணவி ஒருவர் சாலை விபத்தில் பலியானது குறிப்பிடத்தக்கது. அந்த நேரங்களில் மட்டும் காவல்துறையினர் வந்து நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பு அகற்றுகின்றனர் சில நாட்களில் மீண்டும் அது முளைத்து விடுகின்றது. ஆனால் போக்குவரத்து காவல் துறை இதை கண்டு கொள்வதில்லை குறைந்தபட்சம் சிக்னல் மற்றும் சாலையைக் கடக்க வெள்ளை பெயிண்ட் கோடுகள் எதுவும் இல்லை.இதுகுறித்து எத்தனை புகார் அளித்தாலும் போக்குவரத்துக் காவல் துறை கண்டு கொள்வதில்லை. மிகப்பெரிய விபத்து எந்த சமயத்திலும் நடக்கலாம் என்பது போக்குவரத்து காவல்துறைக்கு தெரிவித்துக் கொள்கிறோம். எனவே ராஜேந்திர பிரசாத் சாலையை பொதுமக்கள் பாதுகாப்பாக பயன்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் போக்குவரத்துக் காவல் துறை எடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்



அரிமா சங்கம் சார்பில் காலாண்டு விருதுகள் வழங்கும் விழா தனக்கோட்டி அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கே.எம்.ஜே.அசோக் வரவேற்றார். அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டு ஒருங்கிணைப்பாளர் ஹென்றி சிறப்பு விருந்தினராக பங்கேற்று விருதுகளை வழங்கினார். முதலிடம் பெற்ற அஸ்தினாபுரம் அரிமாசங்கத்திற்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. விழாவில் அரிமா சங்க நிர்வாகிகள் மணி சேகர், கல்யாண சுந்தரம், K.H.சங்கரநாராயணன், ராதா கிருஷ்ணன், மகேஷ், ஏ.டி.ரவிச்சந்திர ஆதித்தன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ராதா நகர் சுரங்கப்பாதை விடிவுகாலம் பிறக்குமா



குரோம்பேட்டை ராதா நகர் சுரங்கப்பாதை பல ஆண்டுகளாக தாமதமாகி வருகிறது. லட்சக்கணக்கான மக்கள் கடந்து செல்லும் இந்த ரயில்வே பாதையில் சுரங்க பாதை அமைக்க கோரி பல்வேறு போராட்டங்களின் மூலம் மக்கள் வற்புறுத்தியதால் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டது. ஆனாலும் குறித்த காலத்தில் முடிக்காமல் ரயில்வே இலாகாவும் மற்ற துறைகளும் இதனை தாமதப்படுத்தி வருகின்றன. இதற்கு விடிவு காலம் எப்போது வரும் என்று மக்கள் வேதனையுடன் காத்திருக்கிறார்கள்.

## இந்தியா வருகிறார் டிரம்ப்

ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை மோடி நிறுத்திவிட்டார் என்று டிரம்ப் மீண்டும் கூறியுள்ளார். அவர் கூறியதாவது;

“இந்தியா உடனான நமது பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் சென்று கொண்டிருக்கின்றன. பிரதமர் மோடி ரஷியாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்திவிட்டார் என்பது நல்ல விஷயம். அவர் எனது நண்பர், சிறந்த மனிதர். என்னை அவர் இந்தியாவிற்கு வருமாறு அழைத்தார். நான் அடுத்த வருடம் இந்தியாவிற்கு செல்ல திட்டமிட்டுள்ளேன். நான் முடிவுக்குக் கொண்டு வந்த எட்டு போர்களில், ஐந்து அல்லது ஆறு போர்கள் வரி விதிப்புகளால் முடிவுக்கு வந்தன. உதாரணமாக இரண்டு அணு ஆயுத நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எட்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அவர்களிடம், ‘நீங்கள் சண்டையை நிறுத்தா விட்டால், நான் உங்கள் மீது வரி விதிப்பேன்’ என்று சொன்னேன். 24 மணி நேரத்திற்குள் நான் போரை முடித்து வைத்தேன். இவ்வாறு டிரம்ப் தெரிவித்தார்.

## திருச்செந்தூரில் பக்தர்களுக்கு கட்டுப்பாடு

திருச்செந்தூரில் பக்தர்கள் தங்க புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. கடற்கரையில் இரவு 10 மணியிலிருந்து அதிகாலை 4 மணி வரை யாரும் தங்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.தற்போது பௌர்ணமி அன்று கடற்கரையில் தங்கும் பழக்கம் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது இதனை தடுக்கும் விதத்தில் இந்த உத்தரவு அமலுக்கு வந்துள்ளது பக்தர்கள் உடல் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வணிக இடங்களில் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதி கட்டாயம் : தமிழ்நாடு அரசு

★மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதி கட்டாயம்

★குடியிருப்புகள், வணிகத் தொழிற்சாலை மற்றும் கல்வி நிறுவன வளாகங்களில் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதி கட்டாயம் ஏற்படுத்தும் வகையில் விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு!

★ 750 சதுர மீட்டருக்கு அதிகமான கட்டுமான பரப்பு, 8 வீடுகளுக்கும் அதிகம் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள், 300 சதுர மீட்டர் FSமிக்கு மேல் உள்ள வணிக கட்டிடங்களில் EV சார்ஜிங் வசதி கட்டாயம் எனத் தெரிவிப்பு.

## பிங்க் ஆட்டோ ஆண்களுக்கு எச்சரிக்கை

சென்னையில் பிங்க் நிற ஆட்டோக்களை ஆண்கள் இயக்கினால் பறிமுதல் செய்யப்படும் என சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் கடும் எச்சரிக்கை. பெண்களுக்காக ரூ.1 லட்சம் மானியம் மற்றும் வங்கி கடனுடன் வழங்கப்பட்ட பிங்க் ஆட்டோக்களை ஆண்கள் சிலர் இயக்கி வருவதாக தொடர்ந்து புகார் எழுந்த நிலையில் எச்சரிக்கை.

Newly Opened
SRI SASTHA MAHAL A/C
Bookings Open
The Group of Sankar Constructions
Fully Airconditioned Thirumana Maaligai
In Hasthinapuram, RP Road
Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
Dining hall capacity of 200 persons
14 A/C Rooms
Modular Kitchen with store room and service lift for dining
Passenger Lift capacity of 16 members
CCTV Camera for whole building
Vinayagar temple is within the premises
The hall is fully equipped with stand by Generator
Pooja items and Unjal available
Ample car parking available for both four wheelers and two wheelers
Valet Car Parking Available
No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.
98416 59929 / 98416 59931 / 90030 10611

INDEPENDENT DUPLEX VILLA FOR SALE
@ URAPAKKAM
IYYENCHERY-1.5 KM FROM
KILLAMBAKKAM BUS STAND
3 BHK - 2119 Sqft
LAND - 1011 Sqft
CCP,AS PER VASTHU
98400 34209

4 BHK INDEPENDENT DUPLEX VILLA
FOR SALE
@ TELLUS AVENUE
MADAMBAKKAM
NEAR SIVAN TEMPLE
LAND AREA:1200 Sqft
BUILT UP AREA : 2000 Sqft

INDEPENDENT DUPLEX TWIN
VILLA FOR SALE @ KEERAPAKKAM
NO 287,AL NAGAR, 7KM FROM URAPAKKAM
4KM FROM KANDIGAI
3 BHK
Land - 782 Sqft
Build Up - 1500 Sqft
CCP
As Per Vasthu
Red Bricks
GN BUILDERS
5/6, MARUTHI NAGAR, MADAMBAKKAM MAIN ROAD, MADAMBAKKAM, CHENNAI - 600 126.
98402 71915 / 86676 36110

Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725